# இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகள் – ஓர் ஆய்வு

**தர்சிக்கா,த., சாந்தினி, அ.**
வரலாற்றுத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
tharshithaya74@gmail.com

*இலங்கையானது இந்துசமுத்திரத்தின் மத்தியில் அமையப்பெற்றுள்ளமையால் ஆசியாக்கண்டத்தின் தெற்கு, தென்மேற்கு, கிழக்காசிய நாடுகளை இணைக்கும் கேந்திரநிலையம் என்ற வகையில் இது முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றது. அந்தவகையில் இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளானது கிறிஸ்துவுக்கு முற்பட்ட நூற்றாண்டுகளிலேயே ஆரம்பித்துவிட்டது. அதன்பின்னர் அரேபியாவிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட அராபிய கோத்திரத்தைச் சேர்ந்த சில குடும்பங்கள் தென்கிழக்காசியாவை நோக்கி கடல்மார்க்கமாக வந்து தென்னிந்தியாவின் சில பகுதிகளிலும் இலங்கையிலும் வந்து குடியேறினார்கள். இவ்வாறு வந்த இவர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என 08 இடங்களில் குடியேறி இலங்கையின் பொருளாதாரத்திலும் முக்கியத்துவம் பெற்றுக்காணப்பட்டார்கள். இந்தியாவில் இவர்களது தொடர்பானது இலங்கையில் ஏற்பட்டது போன்று குடியேற்றங்கள் மூலம் ஏற்படவில்லை மாறாக படையெடுப்புக்கள் மூலமே ஏற்பட்டுக் கொண்டது. படையெடுப்புக்கள் மூலம் ஏற்பட்டுக்கொண்ட இவர்களது இந்தியத்தொடர்பானது வெறுமனே படையெடுப்போடு மட்டும் நின்றுவிடாது படிப்படியாக இந்தியாவில் இஸ்லாமியப்பேரரசொன்று தாபிக்கப்பட்டு வளர்ச்சியடைவதற்கு வித்திட்டுக்கொடுத்தது. இதன் பின்னணியில் முஸ்லிம்களுடைய வர்த்தக நடவடிக்கைகளானது உச்சநிலையை அடைந்ததென்றே கூறலாம். அதன்பின்னர் இவர்கள் இலங்கையிலிருந்து முத்துக்கள், யானைகள், யானைத்தந்தங்கள், இரத்தினக்கற்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் இன்னும் பல பொருட்களை ஏற்றுமதி செய்ததுடன் வெளிநாடுகளிலிருந்து பட்டுகள், சந்தனக்கட்டைகள், அகில், துணிவகைகள், அரேபியாவிலிருந்து குதிரைகள் போன்றவற்றை இறக்குமதியும் செய்தார்கள். இவ்வாறு இலங்கையின் வர்த்தகத் துறையில் பெரும்பங்கு கொண்டிருந்த அராபிய முஸ்லிம்கள் வர்த்தகத்துறையினூடாக இலங்கையின் பொருளாதாரத்துறையை வளர்ச்சியடையச் செய்திருந்தார்கள். இவர்களுடைய இந்த வர்த்தக நடவடிக்கைகளினால் இலங்கையின் புராதன காலத்திலிருந்த துறைமுகங்கள் மட்டுமன்றி புதிய துறைமுகவசதிகளும் புத்தெழுச்சிபெறத்தொடங்கியதுடன் இந்துசமுத்திரத்தின் வர்த்தக நிலையிலும் இவர்கள் முன்னணி பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளினை அடுத்து இலங்கைப்பண்பாட்டிலும் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த ஆய்வின் பிரதான நோக்கங்களாக இலங்கையுடன் அராபிய முஸ்லிம்கள் கொண்டிருந்த தொடர்பினை இனங்காணுதல், இலங்கையுடனான அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கைகளை வெளிக்கொணர்தல், அராபிய முஸ்லிம்களின் வர்த்தக நடவடிக்கை களினால் இலங்கைப்பண்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களை எடுத்துக்காட்டுதல் போன்றன*